# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2339/10 - 2023 ජූලි මස 04 වැනි අඟහරුවාදා - 2023.07.04

*2339/10 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 16/2014*

***2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டம்***

*2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தின் 86(2)(எ) என்னும் பிரிவின் கீழ் மின்வலு மற்றும் சக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கஞ்ஜன விஜேசேக்கர,**
*மின்வலு மற்றும் சக்தி அமைச்சர்.*

கொழும்பு,
*2022, நவெம்பர் 25.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* இவ்வொழுங்குவிதிகள் "உற்பத்தி, பயன்பாடு அல்லது களஞ்சியப்படுத்துகையின் போதான கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பு" ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2022.12.01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*2.* இவ்வொழுங்குவிதிகள் கதிரியக்க மூலங்களின் பாதுகாப்புக்கான அடிப்படைத் தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கின்றன.

*3.* கதிரியக்க மூலமொன்று அல்லது கதிரியக்க மூலத்தின் கூட்டுமொத்தமொன்று, அவை தீய எண்ணம் கொண்ட செயல் ஒன்றில் பயன்படுத்தப்பட்டிருப்பின் அக்கதிரியக்க மூலம் விளைவிக்க முடியுமான சாத்தியமுள்ள தீங்கை அடிப்படையாகக்

கொண்டு, இதற்கான அட்டவணை I இற்கான பட்டியல் I இல் குறித்துரைக்கப்பட்டவாறான பாதுகாப்பு மட்டமொன்றை பின்வருமாறு குறித்துரைத்தல் வேண்டும் :-

(அ) வகுதி 1 கதிரியக்க மூலங்கள் பாதுகாப்பு மட்டம் அ இற்கு குறித்துரைக்கப்படுகின்றன ;

(ஆ) வகுதி 2 கதிரியக்க மூலங்கள் பாதுகாப்பு மட்டம் ஆ இற்கு குறித்துரைக்கப்படுகின்றன ;

(இ) வகுதி 3 கதிரியக்க மூலங்கள் பாதுகாப்பு மட்டம் இ இற்கு குறித்துரைக்கப்படுகின்றன.

4. இதற்கான அட்டவணை I இற்கான பட்டியல் I இல் நிரற்படுத்தப்படாத ஏதேனும் கதிரியக்க மூலமானது, இதற்கான அட்டவணை I இற்கான பட்டியல் II மற்றும் III இல் குறித்துரைக்கப்பட்டவாறு அதன் கதிர்வீச்சு நியூக்ளைட்டுகளின் செயற்பாட்டு விகிதம் மற்றும் நேரொத்த D பெறுமானத்தை அடிப்படையாகக் கொண்டு கதிரியக்க மூல வகுதியைத் தீர்மானித்த பின்னர் பாதுகாப்பு மட்டமொன்றை குறித்தளித்தல் வேண்டும்.

5. இவ்வொழுங்குவிதிகள் புளூடோனியம்-239 அடங்கியுள்ள கதிரியக்க மூலங்களுக்காக தவிர ஏதேனும் அணுப்பொருளுக்கு ஏற்புடையதாதலாகாது.

6. இவ்வொழுங்குவிதிகள் இதற்கான அட்டவணை I இற்கான பட்டியல் I இல் குறித்துரைக்கப்பட்ட எல்லா அ, ஆ மற்றும் இ பாதுகாப்பு மட்டங்களின் முகாமைக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

7. ஆளொருவர், இவ்வொழுங்குவிதிகளின் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படாதிருப்பின் கதிரியக்க மூலத்தின் முகாமையில் ஈடுபடுதலாகாது.

8. (இதனகத்துப் பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் நியதிகளின்படி (இதனகத்துப் பின்னர் "செயல்முறை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அயனாக்கற் கதிர்வீச்சுடன் சம்பந்தப்பட்ட செயல்முறையொன்றை நடாத்துவதற்கு உரிமமொன்று தேவைப்படுத்தப்படும்போது, (இதனகத்துப் பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை அணுசக்தி பேரவை, இவ்வொழுங்குவிதிகளில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படுகின்றனவா எனத் தீர்மானிப்பதற்கென கதிரியக்க மூலங்களுக்கும் எந்த செயலிடத்தில் கதிரியக்க மூலங்கள் முகாமை செய்யப்பட வேண்டியுள்ளதோ அந்த செயலிடத்துக்கும் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு ஒழுங்கேற்பாடுகள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு விண்ணப்பதாரரைக் கோருதல் வேண்டும்.

9. பேரவையின் கோரிக்கையின்மேல் உரிமமளிக்கப்பட்ட செயலிடமொன்றின் எவரேனும் உரிமமளிக்கப்பட்டவர், செயலிடம் மற்றும் மூலங்களின் காணொளிப் படங்களைப் பார்ப்பதற்கும் அதிகாரமளிக்கப்படாத செயல்கள் மற்றும் மூலங்களை அகற்றுவதில் இடையீடு செய்வதற்கும் அவற்றை தடுப்பதற்குமான முன்கூட்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு செயலிடத்தில் உள்ள இயைபான ஆட்களுக்கு அறிவிப்பதற்கும் பதிலிறுப்பு ஆளணியினரை இயலச் செய்வதற்கு செயலிடத்தில் நிறுவப்பட்டுள்ள பௌதீக பாதுகாப்பு முறைமையை பேரவையினால் விதந்துரைக்கப்படும் மத்திய கண்காணிப்பு நிலையமொன்றுடன் தொடர்புபடுத்துவதற்கான தோதான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

10. இவ்வொழுங்குவிதிகளில் தரப்பட்ட தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படுவதில்லையென விண்ணப்பதாரர் எடுத்துக்கூறினால் பேரவையானது உரிமமொன்றை வழங்குதலாகாது.

11. பாதுகாப்பு நிலை பற்றிய தகவல்களைப் பெறுவதற்கெனவும் ஒழுங்குபடுத்தற் தேவைப்பாடுகளுடனான இணங்கியொழுகுதலை சரிபார்ப்பதற்கெனவும் எந்த வளவுகள் மற்றும் செயலிடங்களில் கதிரியக்க மூலங்கள் அமையப்பெற்றுள்ளதோ அந்த வளவுகள் மற்றும் மூலங்களுக்கான உடனடி அணுகுகைக்கு சட்டத்தின் 15 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவையின் எவரேனும் அனுமதிக்கப்பட்ட பரிசோதகருக்கு உரிமமளிக்கப்பட்டவரொருவர் அனுமதியளித்தல் வேண்டும். ஒவ்வொரு உரிமமளிக்கப்பட்டவரும் கதிரியக்க மூலத்தின் பாதுகாப்பு சம்பந்தமாக ஏதேனும் தகவல் மற்றும் ஏதேனும் பதிவேட்டை தேவைப்படுத்தப்பட்டவாறு பேரவைக்கு வழங்குதல் வேண்டும்.

12. உரிமமளிக்கப்பட்டவரொருவர், இவ்வொழுங்குவிதிகளினாலான ஏதேனும் ஏற்புடையற்பாலதான தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்கான ஏதேனும் தவறுகையின் விடயத்தில்-

(அ) 24 மணித்தியாலங்களினுள் பேரவைக்கு அறிக்கையிடுதல் வேண்டும் ;

(ஆ) சூழ்நிலைகளுக்கு பரிகாரமளிப்பதற்கும் ஒத்த நிலைமைகள் மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் தோதான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் ;

(இ) தவறுகை மற்றும் அதற்கான காரணங்கள் சூழ்நிலைகள் அல்லது விளைவுகளைப் புலனாய்வு செய்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) 30 நாட்களினுள் அல்லது தேவைப்படுத்தப்பட்டவாறு தவறுகைக்கான காரணங்கள், அதன் சூழ்நிலைகள் மற்றும் விளைவுகள் பற்றியதும் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட வேண்டிய சீராக்க அல்லது தடுப்பு முறையான நடவடிக்கைகள் பற்றியதுமான அறிக்கையொன்றை பேரவைக்கு வழங்குதல் வேண்டும்.

13. கதிரியக்க மூலத்தின் கட்டுப்பாட்டு இழப்பை உட்படுத்துகின்ற நிலைமையொன்றில், கதிரியக்க மூலத்தின் உள்ளபடியான அல்லது எத்தனிக்கப்பட்ட திருட்டுக்கான அதிகாரமளிக்கப்படாத அணுக்கம் அல்லது கதிரியக்க மூலமொன்றின் நாசவேலை நிகழ்ந்துள்ளவிடத்து அல்லது நிகழ்ந்துகொண்டிருக்கின்றவிடத்து, உரிமமளிக்கப்பட்டவர்-

(அ) பேரவைக்கும் சட்ட வலுவுறுத்தற் குழுக்களுக்கும் உடனடியாக அறிவித்தல் வேண்டும் ;

(ஆ) சூழ்நிலைகளுக்கு பரிகாரமளிப்பதற்கும் ஒத்த நிலைமைகள் மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் ;

(இ) நிகழ்வு மற்றும் அதற்கான காரணங்கள், சூழ்நிலைகள் மற்றும் விளைவுகளைப் புலனாய்வு செய்தல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) 30 நாட்களினுள் அல்லது தேவைப்படுத்தப்பட்டவாறு நிகழ்வுக்கான காரணங்கள், அதன் சூழ்நிலைகள் மற்றும் விளைவுகள் பற்றியதும் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவேண்டிய சீராக்க அல்லது தடுப்புமுறையான நடவடிக்கைகள் பற்றியதுமான அறிக்கையொன்றை பேரவைக்கு வழங்குதல் வேண்டும்.

14. (1) உரிமமளிக்கப்பட்டவரொருவர், கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவையான வழிமுறைகளை தாபித்து நடைமுறைப்படுத்துவதற்கும் இவ்வொழுங்குவிதிகளின் எல்லா தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்குமான பொறுப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) உரிமமளிக்கப்பட்டவரொருவர், கதிரியக்க மூலமொன்றின் பாதுகாப்பை பாதிக்கும் செயலிடங்கள் அல்லது செயற்பாடுகளுக்கான ஏதேனும் திரிபுபடுத்தலை அறிமுகப்படுத்துவதற்கான அவரின் உளக்கருத்து பற்றி பேரவைக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் பேரவையினால் குறிப்பாக அதிகாரமளிக்கப்பட்டாலொழிய அத்தகைய ஏதேனும் திரிபுபடுத்தலை நிறைவேற்றுதலும் ஆகாது.

15. பேரவையினால் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடையற்பாலதான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாமை கண்டுபிடிக்கப்பட்டதன்மேல் உரிமமானது இல்லாதொழிக்கப்படலாம், திரிபுபடுத்தப்படலாம் அல்லது கதிரியக்க மூலமொன்றின் உடைமை தடை செய்யப்படலாம்.

16. (1) இவ்வொழுங்குவிதிகள், காப்பு அல்லது பாதுகாப்பை ஆளும் வேறு ஏற்புடையற்பாலதான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதிலிருந்து உரிமமளிக்கப்பட்டவரை தடை செய்தலாகாது. இதன்கண் அடங்கியுள்ள தேவைப்பாடுகளுக்கும் வேறு சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகளுக்குமிடையில் முரண்பாடொன்று காணப்படுகின்றவிடத்து, அத்தகைய முரண்பாட்டை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கென அத்தகைய முண்பாடு பற்றி பேரவைக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளில் உள்ள எதுவும் காப்பு அல்லது பாதுகாப்புக்கு வேறு வகையாக அவசியமாகக்கூடியவாறான எவையேனும் நடவடிக்கைகளை மட்டுப்படுத்துவதாக பொருளமைத்துக் கொள்ளப்படுதலாகாது.

(3) உரிமமளிக்கப்பட்டவரொருவர், கதிரியக்க மூலங்களின் பாதுகாப்புக்கு தோதானதாக அல்லது அவசியமானதாகக் கருதப்பட்டவாறு இவ்வொழுங்குவிதிகளினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக, பேரவையினால் ஒழுங்குவிதிகள், கட்டளைகள் அல்லது உரிமமொன்றின் நிபந்தனைகள் மூலம் விதிக்கப்பட்ட எவையேனும் மேலதிக தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

17. உரிமமளிக்கப்பட்டவரொருவர்-

(அ) கொள்கைகள் மற்றும் நடவடிக்கைமுறைகள் பாதுகாப்புக்கு அதியுச்ச முன்னுரிமையுடன் தொடங்கப்படுகின்றன என ;

(ஆ) பாதுகாப்பை பாதிக்கும் பிரச்சினைகள், அவற்றின் முக்கியத்துவத்துக்கு ஏற்றவாறான முறையொன்றில் அடையாளம் காணப்பட்டு சீராக்கப்படுகின்றன என ;

(இ) பாதுகாப்புக்கான ஒவ்வொரு தனியாளின் பொறுப்புக்கள் அடையாளங் காணப்படுவதுடன் ஒவ்வொரு தனியாளும் பொருத்தமான முறையில் பயிற்றுவிக்கப்பட்டு தகைமையளிக்கப்படுகின்றார் என ;

(ஈ) பாதுகாப்பு மீதான முடிபுகளுக்கான அதிகாரம் அடையாளங்காணப்படுகின்றது என ; அத்துடன்

(உ) உரிமமளிக்கப்பட்டவரின் முழுமையான ஒழுங்கமைப்பில் ஒழுங்கமைப்புசார் ஒழுங்கேற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு மற்றும் பல்வேறு மட்டங்கள் பற்றிய தகவல்களின் பாய்ச்சலை விளைவாக்குகின்ற தொடர்பாடல் வரிசைகள் உருவாக்கப்படுகின்றன என,

உறுதிப்படுத்துகின்ற, அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாட்டின் அளவு மற்றும் தன்மைக்கு ஏற்றவாறான முகாமைத்துவ முறைமையொன்றை தாபித்தல் வேண்டும்.

18. (1) எந்த ஆளணியினர் மீது பாதுகாப்பு தங்கியிருக்கிறதோ அந்த எல்லா ஆளணியினரும் தோதானமுறையில் பயிற்றுவிக்கப்பட்டு தகைமையளிக்கப்பட்டு தரப்பட்ட நடவடிக்கைமுறைகளுக்கேற்ப தமது கடமைகளைப் புரிகின்றார்கள் என உரிமமளிக்கப்பட்டவரொருவர் உறுதிப்படுத்துதல் வேண்டும். அவர்கள் தோதானவாறாக காலாகாலம் பயிற்றுவிக்கப்படுதல் அல்லது தகைமையளிக்கப்படுதல் வேண்டும். பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் வழக்கமாக மதிப்பிடப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு ஊழியருக்கும், பயனுள்ள பாதுகாப்பு வழிமுறைகளின் முக்கியத்துவம் பற்றி வருடாந்தம் அறிவிக்கப் படுதல் வேண்டும்.

19. உரிமமளிக்கப்பட்டவரொருவர் பின்வருவனவற்றை வழங்குகின்ற தர உறுதிப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை தாபித்தல் வேண்டும்:-

(அ) பாதுகாப்பு தொடர்பான குறித்த ஏற்புடையற்பாலதான தேவைப்பாடுகள் திருப்திப்படுத்தப்படுகின்றன என்ற போதிய உறுதிப்பாடு ;

(ஆ) பாதுகாப்பு முறைமையின் ஆக்கக் கூறுகள், அவற்றின் பணிகளுக்கான போதிய தரத்தைக் கொண்டுள்ளன என்ற உறுதிப்பாடு ; அத்துடன்

(இ) பாதுகாப்பு வழிமுறைகளின் ஒட்டுமொத்த பயனுறுதன்மையை மீளாய்வு செய்வதற்கும் மதிப்பிடுவதற்குமான தரக் கட்டுப்பாட்டு பொறிமுறைகள் மற்றும் நடவடிக்கைமுறைகள்.

20. உரிமமளிக்கப்பட்டவரொருவர்:-

(அ) பேரவையிலிருந்து அங்கீகாரமொன்று பெறப்பட்டாலொழிய ;

(ஆ) பெறுநர் மூலங்களுக்கான செல்லுபடியான உரிமமொன்றை உடைமையில் வைத்திருந்தாலொழிய ; அத்துடன்

(இ) கதிரியக்க மூலங்களின் காப்பு மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவம் சம்பந்தமாக எல்லா இயைபான தொழில்நுட்ப தகவல்களும் பெறுநருக்கு வழங்கப்பட்டாலொழிய,

ஏதேனும் கதிரியக்க மூலத்தை இன்னொரு திறத்தவருக்கு கைமாற்றுதலாகாது.

21. இதற்கான அட்டவணை I இற்கான பட்டியல் I இல் குறித்துரைக்கப்பட்ட கதிரியக்க மூலங்களின் அடிப்படையாகக் கொண்ட மூன்று பாதுகாப்பு மட்டங்களும் பாதுகாப்பு முறைமை செயல்நிறைவேற்றத்துக்கான தேவைப்பாடுகளைக் குறித்துரைத்தல் வேண்டும். ஒவ்வொரு பாதுகாப்பு மட்டமும் நேரொத்த இலக்கொன்றைக் கொண்டுள்ளது. இலக்கானது, பாதுகாப்பு முறைமை, தரப்பட்ட பாதுகாப்பு மட்டமொன்றுக்கு வழங்கும் ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும் என்ற ஒட்டுமொத்த பெறுபேற்றை வரையறுத்துக் கூறுகின்றது. மட்டங்களும் இலக்குகளும் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) பாதுகாப்பு மட்டம் அ - கதிரியக்க மூலங்களின் அதிகாரமளிக்கப்படாத அகற்றுகையைத் தடைசெய்தல். அதிகாரமளிக்கப்படாத அணுகுகை அல்லது அதிகாரமளிக்கப்படாத அகற்றுகையிலான எத்தனிப்பொன்று நிகழ்ந்தால், மூலம் அகற்றப்படுவதை தடைசெய்வதற்கென, எதிரியிடம் இடையீடு செய்வதற்குப் போதுமான காலம் மற்றும் போதிய வளங்களுடன் பதிலளிப்பதற்கு ஆளணியொருவரை இயலச் செய்தல்.

(ஆ) பாதுகாப்பு மட்டம் ஆ - கதிரியக்க மூலங்களின் அதிகாரமளிக்கப்படாத அகற்றுகைக்கான சாத்தியத்தைக் குறைத்தல். அதிகாரமளிக்கப்படாத அணுகுகை அல்லது அதிகாரமளிக்கப்படாத அகற்றுகை பற்றிய எத்தனிப்பொன்று நிகழ்ந்தால், பதிலிறுப்பானது ஊடுறுவலைக் கண்டுபிடித்தல் மற்றும் மதிப்பிடுவதன்மேல் உடனடியாக தொடங்கப்படுதல் வேண்டும்.

(இ) பாதுகாப்பு மட்டம் இ - கதிரியக்க மூலங்களின் அதிகாரமளிக்கப்படாத அகற்றுகைக்கான சாத்தியத்தைக் குறைத்தல்.

22. கதிரியக்க மூலங்களின் அதிகாரமளிக்கப்படாத அகற்றுகையைத் தடுப்பதற்காகவுள்ள பாதுகாப்பு மட்டம் அ இன் இலக்கை எய்துவதற்கென, எவரேனும் உரிமமளிக்கப்பட்டவர் பின்வரும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்:-

(1) கண்டுபிடித்தல்:-

(அ) தொழிற்பாட்டு ஆளணியினராலான இலத்திரனியல் ஊடுறுவல் கண்டுபிடிப்பு முறைமையைப் பயன்படுத்துவதன் மூலம் மற்றும்/அல்லது தொடர்ச்சியான கண்காணிப்பு மூலம் பாதுகாக்கப்பட்ட இடப்பரப்பு அமைவிடத்துக்கான அல்லது மூலத்தின் ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத அணுகுகை பற்றிய உடனடி கண்டுபிடிப்பை வழங்குதல் வேண்டும்.

(ஆ) தொழிற்பாட்டு ஆளணியினராலான இலத்திரனியல் கையிடுதல் கண்டுபிடிப்பு சாதனத்தின் பயன்பாட்டின் மூலம் மற்றும்/ அல்லது தொடர்ச்சியான கண்காணிப்பு மூலம் (உ-ம் உள்ளக உறுப்பினர்) மூலத்தின் ஏதேனும் எத்தனிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்படாத அகற்றுகை பற்றிய உடனடி கண்டுபிடிப்பை வழங்குதல் வேண்டும்.

(இ) தொழிற்பாட்டாளரினால் அல்லது பதிலிறுப்பு ஆளணியினரால் மூடிய மின்சுற்றுத் தொலைக்காட்சியின் (CCTV) தொலைநிலைக் கண்காணிப்பை பயன்படுத்துவதன்மூலம் அல்லது மதிப்பிடுதல்மூலம் கண்டுபிடிப்பு பற்றிய உடனடி மதிப்பீட்டை வழங்குதல் வேண்டும்.

(ஈ) தொலைபேசிகள், கைப்பேசிகள், செய்தி ஏற்பிகள் அல்லது வானொலிகள் போன்ற துரிதமான மற்றும் தங்கியிருக்கத்தகு தொடர்பாடல் வழிவகைகளினூடாக பதிலிறுப்பு ஆளணியினருக்கு உடனடி தொடர்பாடலை வழங்குதல் வேண்டும்.

(உ) நாளாந்தம் உடற்சோதனைகள், மூடிய மின்சுற்றுத் தொலைக்காட்சி (CCTV), கையிடுதலைச் சுட்டிக்காட்டும் சாதனங்கள் முதலியன மூலம் சரிபார்த்தலினூடாக இழப்பை கண்டுபிடிப்பதற்கான வழிவகைகளை வழங்குதல் வேண்டும்.

(2) காலதாமதம்:-

குறைந்தபட்சம் இரு அடுக்குகள் கொண்ட தடுப்புகள் (உ-ம். சுவர்கள், கூண்டுகள்) முறைமையொன்றினூடாக அதிகாரமளிக்கப்படாத அகற்றுகையில் இடையீடு செய்வதற்கு ஆளணியினருக்கான போதிய பதிவிருப்பை, கண்டுபிடித்ததன் பின்னர் காலதாமதத்தை வழங்குதல் வேண்டும் ; அதனுடன் சேர்த்து பதிலிறுப்பு ஆளணியினருக்கு பணித்தடையிடுவதை இயலச் செய்வதற்கு போதிய காலதாமதத்தை வழங்குதல் வேண்டும்.

(3) பதிலிறுப்பு:-

அளவு, சாதனம் மற்றும் பணித்தடையிடுவதற்கான பயிற்சியுடன் உடனடி பதிலிறுப்புக்கான இயலாற்றலினூடாக அதிகாரமளிக்கப்படாத அகற்றுகையில் இடையீடு செய்து தடுப்பதற்கான போதிய வளங்களுடன் எச்சரிக்கையிட உடனடி பதிலிறுப்பை வழங்குதல் வேண்டும். பாதுகாப்பு எதிர்பாரா திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பாதுகாப்பு நிகழ்ச்சிபற்றிய முகாமைக்குப் பொறுப்பாகவுள்ள இயைபான ஆட்களுக்கும் அக்கறையாளர்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.

23. எவரேனும் உரிமமளிக்கப்பட்டவர், கதிரியக்க மூலங்களின் அதிகாரமளிக்கப்படாத அகற்றுகையைக் குறைக்கின்ற பாதுகாப்பு மட்டம் ஆ இன் இலக்கை எய்துவதற்கென பின்வரும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்:-

(1) கண்டுபிடித்தல்:

(அ) தொழிற்பாட்டு ஆளணியினராலான இலத்திரனியல் ஊடுறுவல் கண்டுபிடிப்பு சாதனத்தை பயன்படுத்துவதன் மூலம் மற்றும்/அல்லது தொடர்ச்சியான கண்காணிப்பு மூலம் பாதுகாக்கப்பட்ட இடப்பரப்பு அமைவிடத்துக்கான அல்லது மூலத்தின் ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத அணுகுகை பற்றிய உடனடி கண்டுபிடிப்பை வழங்குதல் வேண்டும்.

(ஆ) தொழிற்பாட்டு ஆளணியினராலான கையிடுதல் கண்டுபிடிப்பு சாதனத்தின் பயன்பாடு மற்றும் அல்லது காலாகால சோதனைகளினூடாக மூலத்தின் ஏதேனும் எத்தனிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்படாத அகற்றுகை பற்றிய கண்டுபிடிப்பை வழங்குதல் வேண்டும்.

(இ) தொழிற்பாட்டாளரினால் அல்லது பதிலிறுப்பு ஆளணியினரால் மூடிய மின்சுற்றுத் தொலைக்காட்சியின் (CCTV) தொலைநிலைக் கண்காணித்தல் அல்லது மதிப்பிடுதலின் ஊடாக கண்டுபிடித்தலின் உடனடி மதிப்பீட்டை வழங்குதல் வேண்டும்.

(ஈ) தொலைபேசிகள், கைப்பேசிகள், செய்தி ஏற்பிகள் அல்லது வானொலிகள் போன்ற துரிதமான மற்றும் தங்கியிருக்கத்தகு தொடர்பாடல் வழிவகைகளினூடாக பதிலிறுப்பு ஆளணியினருக்கு உடனடி தொடர்பாடலை வழங்குதல் வேண்டும்.

(உ) வாராந்தம் பௌதீக சோதனைகள், கையிடுதல் கண்டுபிடிப்பு சாதனம் முதலியன மூலம் சரிபார்த்தலினூடாக இழப்பை கண்டுபிடிப்பதற்கான வழிவகைகளை வழங்குதல் வேண்டும்.

(2) காலதாமதம்:-

இரண்டு அடுக்குகள் கொண்ட தடுப்புகள் (உ-ம். சுவர்கள், கூண்டுகள்) முறைமையொன்றினூடாக அதிகாரமளிக்கப்படாத அகற்றுகையின் சாத்தியத்தைக் குறைப்பதற்கு காலதாமதத்தை வழங்குதல் வேண்டும்.

(3) பதிலிறுப்பு:-

உடனடியாக பதிலிறுப்பை முன்னெடுப்பதற்கான சாதனம் மற்றும் நடவடிக்கை முறைகளின் பயன்பாட்டினூடாக அதிகாரமளிக்கப்படாத அகற்றுகையில் இடையீடு செய்வதற்கு உடனடி பதிலிறுப்பு முன்னெடுப்பை வழங்குதல் வேண்டும். பாதுகாப்பு எதிர்பாரா திட்டமொன்று தயாரிக்கப்பட்டு, உடனடி பதிலிறுப்புக்கான முறைகளை விவரித்து பாதுகாப்பு நிகழ்ச்சி பற்றிய முகாமைக்குப் பொறுப்பாகவுள்ள இயைபான ஆட்கள் மற்றும் அக்கறையாளர்களுக்கு பகிரப்படுதல் வேண்டும்.

24. எவரேனும் உரிமமளிக்கப்பட்டவர், கதிரியக்க மூலங்களின் அதிகாரமளிக்கப்படாத அகற்றுகையைக் குறைக்கின்ற பாதுகாப்பு மட்டம் இ இன் இலக்கை எய்துவதற்கென பின்வரும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்:-

(1) கண்டுபிடித்தல்:

(அ) தொழிற்பாட்டு ஆளணியினராலான கையிடுதல் கண்டுபிடிப்பு சாதனத்தின் பயன்பாடு மற்றும்/அல்லது காலாகால சோதனைகளினூடாக மூலத்தின் அதிகாரமளிக்கப்படாத அகற்றுகை பற்றிய கண்டுபிடிப்பை வழங்குதல் வேண்டும்.

(ஆ) தொழிற்பாட்டாளரினால் அல்லது பதிலிறுப்பு ஆளணியினரால் மதிப்பிடுகையொன்றினூடாக கண்டுபிடிப்பு பற்றிய உடனடி மதிப்பிடுகையை வழங்குதல் வேண்டும்.

(இ) மாதாந்தம் பௌதீக சோதனைகள், கையிடுதலை சுட்டிக்காட்டும் சாதனங்கள் முதலியன மூலம் சரிபார்த்தலினூடாக இழப்பை கண்டுபிடிப்பதற்கான வழிவகைகளை வழங்குதல் வேண்டும்.

(2) காலதாமதம்:-

தொழிற்பாட்டு ஆளணியினராலான தடுப்பு ஒன்றின் (உ-ம். கூண்டு, மூல வீடமைப்பு) பயன்பாட்டின்மூலம் அல்லது அவதானிப்பினூடாக அதிகாரமளிக்கப்படாத அகற்றுகையின் சாத்தியத்தைக் குறைப்பதற்கான காலதாமதத்தை வழங்குதல் வேண்டும்.

(3) பதிலிறுப்பு:-

பாதுகாப்பு எதிர்பாரா திட்டங்களுக்கிணங்க அவசியமான நடவடிக்கைகளை அடையாளம் காணுவதற்கான நடவடிக்கை முறைகளின் பயன்பாட்டின்மூலம் மூலமொன்றின் அதிகாரமளிக்கப்படாத அகற்றுகையின் விடயத்தில் தோதான நடவடிக்கையை நடைமுறைப்படுத்தல் வேண்டும். பாதுகாப்பு எதிர்பாரா திட்டமொன்று தயாரிக்கப்பட்டு உடனடி பதிலிறுப்புக்கான முறைகளை விவரித்து பாதுகாப்பு நிகழ்ச்சி பற்றிய முகாமைக்குப் பொறுப்பாகவுள்ள இயைபான ஆட்கள் மற்றும் அக்கறையாளர்களுக்கு பகிரப்படுதல் வேண்டும்.

25. (1) செயல்முறையொன்றை நடாத்துவதற்கு சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் உரிமமொன்றுக்காக விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கின்ற எவரேனும் ஆள், மூலங்கள் மற்றும் செயலிடங்களின் பாதுகாப்பு மட்டத்திற்கிணங்க, 22, 23 மற்றும் 24 ஆம் ஒழுங்குவிதிகளில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு கண்டுபிடிப்பு, காலதாமதம் மற்றும் பதிலிறுப்புக்காக மூலங்கள் மற்றும் செயலிடங்களுக்கு வழங்கப்படவேண்டிய கருவிகள், சாதனங்கள், தடுப்புகள், அடைப்புகள், தொடர்பாடல் கருவிகளின் வகைகளை விவரித்து மூலங்கள் மற்றும் செயலிடங்களின் பௌதீகபாதுகாப்புக்காக தாபிக்கப்பட்ட ஒழுங்கேற்பாடுகள் பற்றி விண்ணப்பத்துக்கான இணைப்பொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) செயல்முறையொன்றை நடாத்துவதற்கு சட்டத்தின்கீழ் உரிமமொன்றுக்காக விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கின்ற எவரேனும், ஆள், அவ்விண்ணப்பத்துடன், நியாயமான முறையில் எதிர்பார்க்கக்கூடிய பாதுகாப்பு நிகழ்ச்சிகள், ஆரம்ப திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் செயலிட ஆளணியினருக்கும் பதிலிறுப்பு ஆளணியினருக்கும் குறித்தளிக்கப்பட்ட பொறுப்புக்கள் என்பவற்றை அடையாளப்படுத்துகின்ற பாதுகாப்பு எதிர்பாரா திட்டத்தை வழங்குதல் வேண்டும்.

(3) மூலங்கள் மற்றும் செயலிடங்களுக்கான பௌதீக பாதுகாப்பின் தொடர்ச்சியான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு பௌதீக பாதுகாப்பு முறைமையின் பேணுகைக்குப் பொறுப்பாகவுள்ள ஆளணியினரின் பெயர்கள் மற்றும் தகைமைகள் உட்பட (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்டவாறு நிறுவப்பட்ட பௌதீக பாதுகாப்பு முறைமைக்கு தாபிக்கப்பட்ட பேணுகை நிகழ்ச்சித்திட்டத்தின் விபரமான விவரணத்தை உரிமத்துக்கான விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) பௌதீக பாதுகாப்பு முறைமைகளின் மற்றும்/ அல்லது பேணுகை இவ்வொழுங்குவிதிகளின் கீழ் தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய திறத்தவர் அல்லது கம்பெனி பௌதீக பாதுகாப்பு ஒப்பந்தகாரர் பேரவையுடன் பதிவு செய்யப்பட்டாலொழிய அத்திறத்தவர் அல்லது கம்பெனியுடன் பௌதீக பாதுகாப்பு முறைமையின் நிறுவுகை மற்றும்/அல்லது பேணுகைக்கான ஒப்பந்தமொன்றில் உரிமமளிக்கப்பட்டவரொருவர் ஒப்பமிடுதலாகாது.

(5) எவரேனும் பாதுகாப்பு ஒப்பந்தகாரர், பேரவையிலிருந்து பெறப்பட்ட பதிவுச்சான்றிதழின்றி இவ்வொழுங்கு விதிகளின் கீழ் பாதுகாப்பு முறைமையின் நிறுவுகை அல்லது பேணுகையை வழங்குதலாகாது அல்லது பொறுப்பேற்றலாகாது. திறத்தவரை அல்லது கம்பெனியைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் விதித்துரைக்கப்பட்ட படிவங்களில் பேரவைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

26. உரிமமளிக்கப்பட்டவரொருவர், பேரவையின் அங்கீகாரத்துடன் தவிர எவரேனும் பாதுகாப்பு உதவிச் சேவை வழங்குநரிடமிருந்து அணுப் பாதுகாப்பில் ஆளணியினரின் பயிற்சிக்கான சேவை உட்பட அணுப்பு பாதுகாப்பு தொடர்பான சேவையொன்றை பெறுதல் ஆகாது.

27. 21 ஆம் ஒழுங்குவிதியில் கூறப்பட்ட இலக்குகளை எய்துவதற்கென உரிமமளிக்கப்பட்டவரொருவர்:-

(அ) (i) அடையாளம் காணல் மற்றும் சரிபார்த்தல், உதாரணமாக தேய்க்கும் அட்டை படிப்பான் மூலம் கட்டுப்படுத்தப்படும் பூட்டு மற்றும் தனிப்பட்ட அடையாளம் காணல் இலக்கம் அல்லது சாவி மற்றும் பாதுகாப்பு மட்டம் அ இற்கான சாவிக் கட்டுப்பாடு ; அத்துடன்

(ii) பாதுகாப்பு மட்டம் ஆ மற்றும் இ இற்கான அடையாளங் காணல் வழிமுறையொன்றின்மூலம், அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்கு பயனுள்ள முறையில் அணுக்கத்தை மட்டுப்படுத்தும் மூலத்தின் அமைவிடத்திற்கான அணுகுகைக் கட்டுப்பாட்டை வழங்குதல் வேண்டும்.

(ஆ) மூலத்தின் அமைவிடத்துக்கான தனியான அணுக்கத்துக்கும் உணர்வுகளை தூண்டுகின்ற தகவலுக்கான அணுக்கத்துக்கும் அதிகாரமளிக்கப்பட்ட எல்லா ஆளணியினருக்கான பின்னணி சோதனைகளினூடாக அதிகாரமளிக்கப்பட்ட தனியாட்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(இ) உணர்வுகளைத் தூண்டுகின்ற தகவலை அடையாளம் காணுவதற்கான நடவடிக்கை முறைகளைப் பயன்படுத்துவதினூடாக உணர்வுகளை தூண்டுகின்ற தகவலை அடையாளம் கண்டு அவற்றை பாதுகாத்தல் வேண்டும் என்பதுடன் அதிகாரமளிக்கப்படாத வெளிவிடுகையிலிருந்தும் அதனை பாதுகாத்தலும் வேண்டும்.

(ஈ) மூன்றாம் ஒழுங்குவிதியுடன் இசைந்தொழுகுவதற்கு இடப்பாதுகாப்பு திட்டமொன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன் எழுத்திலான பாதுகாப்பு ஒழுங்கேற்பாடுகள் மூலம் பாதுகாப்பு மட்டம் அ மற்றும் ஆ இற்கான அதிகரிக்கப்பட்ட அச்சுறுத்தல் மட்டங்களுக்கான பதிலிறுப்பு மற்றும் பாதுகாப்பு மட்டம் இ இற்கான குறிப்பீட்டு நடவடிக்கைமுறைகளையும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(உ) பாதுகாப்பு தொடர்பான நிகழ்நிலவரங்களுக்கு பதிலளிப்பதற்கான நடவடிக்கைமுறைகளினூடாக பாதுகாப்பு திட்டங்களினால் மேவப்பட்ட பாதுகாப்பு நிகழ்ச்சிகளை முகாமைசெய்வதற்கான இயலாற்றலை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஊ) பாதுகாப்பு நிகழ்ச்சி அறிக்கையிடும் முறைமையொன்றைத் தொடங்குதல் வேண்டும்.

28. பின்வரும் தேவைப்பாடுகளை எதிர்கொள்கின்ற, எந்த செயலிடத்தில் மூலங்கள் செய்யப்படவேண்டியுள்ளதோ அந்த செயலிடம் உட்பட, பாதுகாப்பு மட்டங்கள் மற்றும் அ மற்றும் ஆ இல் கதிரியக்க மூலங்களுக்கான இடப் பாதுகாப்புத் திட்டமொன்றை உரிமமளிக்கப்பட்டவரொருவர் தயாரித்தல் வேண்டும்:

(அ) இடப்பாதுகாப்புத் திட்டமானது இதற்கான அட்டவணை II இல் தரப்பட்டுள்ளவாறான எல்லா தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) இடப் பாதுகாப்புத் திட்டமானது, ஏற்புடையற்பாலனவாறு பாதுகாப்பு மட்டம் அ அல்லது ஆ இற்காக தேவைப்படுத்தப்பட்ட பாதுகாப்பு குறிக்கோள்கள் மற்றும் வழிமுறைகளுக்கு எதிராக வருடாந்தம் பரீட்சிக்கப்பட்டு மதிப்பிடப்படல் வேண்டும். இடப் பாதுகாப்புத் திட்டமானது பரீட்சிப்பின் அடிப்படையாகக் கொண்டு மீளாய்வு செய்யப்படல் வேண்டும். திட்டம் அல்லது பாதுகாப்பு முறைமைகளில் உள்ள ஏதேனும் குறைபாடு உரிய முறையில் கவனம் செலுத்தப்பட்டு பேரவைக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) இடப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் அத்தகைய திட்டத்துக்கான எவையேனும் திரிபுபடுத்தல்கள் அங்கீகாரத்துக்காக விடயத்துக்கேற்ப உரிமமொன்றின் விண்ணப்பதாரர் உரிம விண்ணப்பத்தினதும் உரிமமளிக்கப்பட்டவொருவரினால் அனுப்பப்படும் உரிம புதுப்பித்தல் விண்ணப்பத்தினதும் பாகமாக பேரவைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

29. நடமாடும் அல்லது காவிச் செல்லத்தகு கதிரியக்க மூலத்துக்கான பிரிவு 22, 23 மற்றும் 24 இன் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு சாத்தியமற்றதாகவிருக்கின்றவிடத்து, உரிமமளிக்கப்பட்டவர், சமமான பாதுகாப்பு மட்டமொன்றை வழங்குவதற்கு பயன்படும் வழிமுறைகள் பற்றிய விவரணம் ஒன்றை விண்ணப்பத்திலும் பாதுகாப்புத் திட்டத்திலும் உள்ளடக்குதல் வேண்டும்.

30. (1) உரிமமளிக்கப்பட்டவரொருவர், கதிரியக்க மூலமொன்றை இலக்காகக் கொண்ட குறிப்பிட்ட அச்சுறுத்தலொன்று உள்ளது என அறிந்துகொண்டால் அல்லது சந்தேகித்தால், உரிமமளிக்கப்பட்டவர் அச்சுறுத்தலுக்கிணங்க பாதுகாப்பு வழிமுறைகளை அதிகரித்தல் வேண்டும் என்பதுடன் எடுக்கப்பட்ட பாதுகாப்பு வழிமுறைகள் உடனடியாக பேரவைக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(2) அதிகரிக்கப்பட்ட பாதுகாப்பு வழிமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:-

(அ) மூலமானது பயன்பாட்டில் இருப்பின் அதனை அதன் பாதுகாப்பான களஞ்சியப்படுத்துகை அமைவிடத்துக்கு திருப்பியனுப்புதல் ;

(ஆ) மேலதிக காணொளி புகைப்படக்கருவிகள் அல்லது மேலதிக ஊடுறுவல் எச்சரிக்கையொன்றைப் பயன்படுத்தி 24 மணித்தியால பாதுகாப்பை வழங்குதல் ;

(இ) சட்ட வலுவுறுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தற் குழு சந்தேகிக்கப்பட்ட அச்சுறுத்தலை அறிவார்கள் என உறுதிப்படுத்தல் ;

(ஈ) சட்ட வலுவுறுத்தல் மற்றும் பதிலிறுப்பு ஆளணியினருடன் பாதுகாப்பு நடவடிக்கை முறைகள், செயலிட தளவமைப்பு மற்றும் கதிர்வீச்சுக் காப்பு செயல்முறைகளை மீளாய்வு செய்தல் ; அத்துடன்

(உ) கதிரியக்கம்சார் அவசரகால நிலைமைகளைக் கையாளக்கூடிய நன்கு சாதனமிடப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்ட ஆளணியினருடனான மருத்துவ வசதிகள் உட்பட அவசரகால பதிலிறுப்பு நடவடிக்கை முறைகள் செல்லுபடியானவை என உறுதிப்படுத்தல்.

(3) பாதுகாப்பு வழிமுறைகளின் அதிகரிப்பு, குறிப்பிட்ட அச்சுறுத்தல் காணப்படும் வரை தொடரப்படுதலாகாது.

(4) பாதுகாப்பு வழிமுறைகளின் அதிகரிப்பு, (உ-ம். மூலப்பரிமாற்றம், பேணுகை) மூலத்தின் படைப்பு, கப்பலேற்றுகை காலப்பகுதியின் போது அல்லது வேறு பாதிப்பு ஏற்படக்கூடிய நிலைமைகளின் கீழ் பாதுகாப்பு மட்டம் அ மற்றும் ஆ கதிரியக்க மூலங்களுக்காக ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

31. (1) உரிமமளிக்கப்பட்டவரொருவர் கதிரியக்க மூலங்களின் வருடாந்த பொருட் பதிவேடொன்றை பேணுதல் வேண்டும் என்பதுடன் பேரவையினாலான சோதனைக்காக இற்றைப்படுத்தப்பட்ட பொருட் பதிவேடுகளின் பதிவுகளை வைத்திருத்தல் வேண்டும்.

(2) பொருட் பதிவேடுகளானவை, கதிரியக்க மூலங்களின் கைமாற்றம் அல்லது பெறுகையின்மேல் சரி செய்யப்படுதல் வேண்டும் ;

(3) தனியான கதிரியக்க மூலம் பதிவேடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:

(அ) மூலத்தின் அமைவிடம் ;

(ஆ) கதிர்வீச்சு நியூக்ளைட்டு ;

(இ) குறித்துரைக்கப்பட்ட திகதியொன்றிலான கதிரியக்கச் செயற்பாடு ;

(ஈ) தொடரிலக்கம் அல்லது தனித்தன்மையான அடையாளம் காட்டி ;

(உ) இரசாயன அல்லது பௌதீக வடிவம் ;

(ஊ) களஞ்சியப்படுத்துகை அமைவிடத்துக்கும் அவற்றிலிருந்தான எல்லா நகர்வுகளையும் பதிவு செய்தல் உட்பட மூலத்தின் பயன்பாட்டு வரலாறு ;

(எ) மூலத்தின் பெறுகை, கைமாற்றம் அல்லது கையுதிர்ப்பு ; அத்துடன்

(ஏ) மூலமானது அடையாளம் காணப்படுவதற்கும் கண்டறியத்தக்கதாக விருப்பதற்கும் இயலச் செய்வதற்கு தோதானவாறான வேறு தகவல்கள்.

32. இவ்வொழுங்குவிதிகளில் -

"சட்டம்" என்பது, 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டம் எனப்படும்

"விண்ணப்பதாரர்" என்பது, 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவினால் உரிமமொன்றைப் பெறுவதற்கான விண்ணப்பமொன்றை சமர்ப்பிக்கின்ற ஆளொருவர் எனப் பொருள்படும் ;

"பேரவை" என்பது, 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தும் பேரவை எனப் பொருள்படும்.

''காலதாமதம்'' என்பது, தடுப்புகள் அல்லது வேறு பௌதீக வழிவகைகளினூடாக கதிரியக்க மூலமொன்றுக்கு அதிகாரமளிக்கப்படாத அணுக்கத்தை பெறுவதற்கு அல்லது அதனை அகற்றுவதற்கு அல்லது அழிப்பதற்கு எதிராளர் ஒருவருக்கு தேவைப்படுத்தப்பட்ட நேரத்தை அதிகரிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட பௌதீக பாதுகாப்பு முறைமையொன்று பற்றிய அம்சம் எனப் பொருள்படும்;

''கண்டுபிடித்தல்'' என்பது, சாத்தியமானளவு தீய எண்ணம் கொண்ட அல்லது வேறு அதிகாரமளிக்கப்படாத செயலொன்றை உணர்வதுடன் ஆரம்பிக்கின்றதும் எச்சரிக்கைக்கான காரணத்தை மதிப்பிடுவதுடன் நிறைவு செய்யப்படுகின்றதுமான பௌதீக பாதுகாப்பு முறைமையொன்றில் உள்ள செயல்முறையொன்று எனப் பொருள்படும்;

''செயலிடம்'' என்பது, 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''இறக்குமதி'' என்பது, இவ்வொழுங்குவிதிகளினால் மேவப்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கதிரியக்க மூலத்தை (மூலங்களை), ஏற்றுமதி செய்யும் அரசொன்றிலிருந்து தோற்றுவிக்கப்படும் இறக்குமதி செய்யும் அரசொன்றிற்கு அல்லது இறக்குமதி செய்யும் அரசொன்றிலுள்ள பெறுநர் ஒருவருக்கான பௌதீகக் கைமாற்றம் எனப் பொருள்படும்;

''அயனாக்கற் கதிர்வீச்சு'' என்பது, 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''உரிமம்' என்பது, 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''உரிமமளிக்கப்பட்டவர்'' என்பது, 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''முகாமை'' என்பது, கதிரியக்க மூலங்களின் உற்பத்தி, வழங்குகை, பெறுகை, உடைமை, களஞ்சிப்பத்துகை, பயன்பாடு, கைமாற்றம், இறக்குமதி, ஏற்றுகமதி, பேணுகை, மீள்சுழற்சி அல்லது கையுதிர்த்தலுடன் சம்பந்தப்பட்ட நிருவாகம் மற்றும் தொழிற்பாட்டு செயற்பாடுகள் எனப் பொருள்படும்;

''தீய எண்ணம் கொண்ட செயல்'' என்பது, கதிரியக்க மூலமொன்றின் அதிகாரமளிக்கப்படாத அகற்றுகை அல்லது நாசவேலை பற்றிய செயல் ஒன்று அல்லது எத்தனிப்பு எனப் பொருள்படும்;

''அணுப்பொருள்'' என்பது, 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதேகருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''பௌதீக பாதுகாப்பு ஒப்பந்தகாரர்'' என்பது, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட பௌதீக பாதுகாப்பு சாதனங்களின் நிறுவுகை, பேணுகை மற்றும் ஆட்களின் பயிற்சிக்கான முறையான தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் போதிய மனித வளங்களைக் கொண்டு பேரவையுடன் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் அல்லது கம்பெனி ஒன்று எனப் பொருள்படும்;

''பௌதீக பாதுகாப்பு முறைமை'' என்பது, தீய எண்ணம் கொண்ட செயல் ஒன்று நிறைவு செய்யப்படுவதை தடுப்பதற்கு உட்கருதப்பட்ட பௌதீக பாதுகாப்பு வழிமுறைகளின் ஒன்றிணைக்கப்பட்ட தொகுதியொன்று எனப் பொருள்படும்;

''அயனாக்கற் கதிர்வீச்சுடன் சம்பந்தப்பட்ட செயல்முறை'' என்பது, 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''கதிரியக்கப் பொருள்'' என்பது, 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''கதிரியக்க மூலம்'' என்பது, 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதேகருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''பதிலிறுப்பு'' என்பது, கண்டுபிடிப்பைத் தொடர்ந்து எதிரியொருவர் வெற்றிகொள்வதிலிருந்து தடுப்பதற்கு அல்லது பாரதூரமான விளைவுகளை சாத்தியமானளவு தணிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எனப் பொருள்படும். பாதுாப்பு

அல்லது சட்ட வலுவுறுத்தல் ஆளணியினரால் மற்றும் வேறு அரச முகவராண்மைகளினால் பொதுவாக புரியப்படும் இந்நடவடிக்கைகள், எத்தனிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்படாத அகற்றுகை அல்லது நாசவேலை செயலில் இருக்கின்ற அதேநேரம் எதிரியொருவரை இடையீடு செய்தல் மற்றும் அடக்குதல், எதிரியொருவரை தீங்குவிளைவிக்கக்கூடிய விளைவுகளை ஏற்படுத்துவதற்கு கதிரியக்க மூலத்தை பயன்படுத்துவதிலிருந்து தடுத்தல், கதிரியக்க மூலத்தை மீட்டெடுத்தல் அல்லது வேறுவகையாக விளைவுகளின் பாரதூரத்தைக் குறைத்தலை உள்ளடக்கும்;

''நாசவேலை'' என்பது, கதிர்வவீச்சுக்கு வெளிக்காட்டுதல் அல்லது கதிரியக்க பதார்த்தங்களை வெளியேற்றல் மூலம் ஆளணியினரின், பொது மக்களின் சுகாதாரம் மற்றும் காப்பு, அல்லது சூழலை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஆபத்துக்குள்ளாக்க முடியுமான, கதிரியக்க மூலமொன்று அல்லது இணைந்த செயலிடத்துக்கெதிராக இயக்கப்பட்ட ஏதேனும் வேண்டுமென்ற செயல் அல்லத செயற்பாடு எனப் பொருள்படும்;

''காப்பு'' என்பது, 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதேகருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''பாதுகாப்பு கலாசாரம்'' என்பது, அணுப் பாதுகாப்புக்கு ஆதரவளித்தல், அதனை அதிகரித்தல் மற்றும் நிலைபெறச் செய்வதற்கான வழிவகைகளாக சேவை புரிகின்ற தனியாட்கள், ஒழுங்கமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் பண்புகள், மனப்பாங்குகள் மற்றும் நடத்தைகளின் சேர்க்கை எனப் பொருள்படும்;

''பாதுகாப்பு எதிர்பாராத் திட்டம்'' என்பது, நியாயமானமுறையில் எதிர்பார்க்கக்கூடிய பாதுகாப்பு நிகழ்வுகளை அடையாளம் காணுகின்ற, (தோதான அதிகாரிகளை எச்சரிக்கை செய்தல் உட்பட) ஆரம்ப திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை வழங்குகின்ற மற்றும் தோதான தொழிற்பாட்டு ஆளணியினருக்கும பதிலிறுப்பு ஆளணியினருக்கும் பொறுப்புக்கள குறித்தளிக்கின்ற பாதுகாப்புத் திட்டமொன்றின் பாகமொன்று அல்லது தனிப்பட்ட ஆவணம் ஒன்று எனப் பொருள்படும்;

''இடப் பாதுகாப்புத் திட்டம்' என்பது, செயலிடமொன்றில் உள்ள இடமொன்றிலுள்ள பாதுகாப்பு ஒழுங்கேற்பாடுகள் பற்றிய விரிவான விவரணம் ஒன்றை முன்வைக்கின்ற தொழிற்பாட்டாளரினால் தயாரிக்கப்பட்ட ஆவணமொன்று எனப் பொருள்படும்;

''பாதுகாப்பு நிகழ்ச்சி'' என்பது, அணுப் பாதுகாப்புக்கான சிக்கல்களைக் கொண்டதாக மதிப்பிடப்படுகின்ற நிகழ்வு ஒன்று எனப் பொருள்படும்;

''களஞ்சியப்படுத்துகை'' என்பது, மீட்டெடுக்கும் உளக்கருத்துடன் கதிரியக்க மூலங்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான ஏற்பாடு செய்கின்ற செயலிடமொன்றில் அவற்றை வைத்திருத்தல் எனப் பொருள்படும்;

''அச்சுறுத்தல்'' என்பது, தீய எண்ணம் கொண்ட செயலொன்றைப் புரிவதற்கான உந்துதல், உளக்கருத்து மற்றும் இயலாற்றுலுடன் உள்ள ஆள் ஒருவர் அல்லது ஆட்கள் குழு எனப் பொருள்படும்;

''நம்பிக்கையானதன்மை பற்றிய தீர்மானம்'' என்பது, உள்ளகர்களாக வர முடியுமான ஆட்களின் உந்துதல் அல்லது நடத்தையை அடையாளம் காணுவதற்கு உட்கருதப்பட்ட தொழிலுக்கு முன்னரான சோதனைகளில் மற்றும் தொழிலின் போதான சோதனைகளில் தனியாள் ஒருவரின் நாணயம், நேர்மை மற்றும் நம்பகத்தன்மையின் மதிப்பிடுகை எனப் பொருள்படும்; அத்துடன்

''அதிகாரமளிக்கப்படாத அகற்றுகை'' என்பது, கதிரியக்க மூலங்களைத் திருடுதல் அல்லது வேறு சட்டமுறையற்ற அகப்படுத்துகை எனப் பொருள்படும்;

**அட்டவணை I**

(ஒழுங்குவிதிகள் 3, 4, 6 மற்றும் 21)

**பட்டியல் I**

**பொதுவாகப் பயன்படுத்தப்படும் மூலங்களுக்கு குறித்தளிக்கப்பட்ட பாதுகாப்பு மட்டங்கள்**

| பாதுகாப்பு மட்டம் | மூலம்[a] | வகுதி |
|---|---|---|
| அ | கதிர்வீச்சு ஐசோடொப் வெப்ப மின்பிறப்பாக்கிகள் (RTGs)<br>கிருமி தொற்றுநீக்கம் செய்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பில் பயன்படுத்தப்படும் கதிர் பிறப்பிக்கச் செய்யும் கருவிகள்<br>சுய கவச கதிர் பிறப்பிக்கச் செய்யும் கருவிகள்<br>குருதி/இழைய கதிர் பிறப்பிக்கச் செய்யும் கருவிகள்<br>தொலைகதிர் சிகிச்சை மூலங்கள்<br>நிலையான பல்கற்றை தொலைகதிர் சிகிச்சை (கெம்மா வெட்டும்) மூலங்கள் | 1 |
| ஆ | கைத்தொழில்சார் கெம்மா கதிர்ப்படவியல் மூலங்கள்<br>உயர்/நடுத்தர ஊட்டு வீத பிரீச்சி கதிர் சிகிச்சை மூலங்கள் | 2 |
| இ | வெவ்வேறு மூலவகைகள் மற்றும் கதிர்வீச்சு நியூக்ளைட்டுகள் தொடர்பில் கீழே தரப்பட்ட உயர் செயற்பாட்டு கதிரியக்க மூலங்களை ஒன்றிணைக்கின்ற நிலையான/நடமாடும் கைத்தொழில்சார் அளவீடுகள்<br><br>மட்ட அளவீடுகள்<br><br>Cs - 137: செயற்பாடு 3.7E - 02 TBq அல்லது அதனைவிட அதிகம்<br>Co - 60: செயற்பாடு 3.7E - 03 TBq அல்லது அதனைவிட அதிகம்<br><br>மதிப்பாய்வு மூலங்கள்<br><br>Am - 241: செயற்பாடு 1.9E - 01 TBq அல்லது அதனைவிட அதிகம்<br>Pu - 239/Be: செயற்பாடு 7.4E - 02 TBq அல்லது அதனைவிட அதிகம்<br><br>கொண்டுசெல்லி அளவீடுகள்<br><br>Cs - 137: செயற்பாடு 1.1E - 04 TBq அல்லது அதனைவிட அதிகம்<br>Cf - 252: செயற்பாடு 1.4E - 03 அல்லது அதனைவிட அதிகம் | 3 |

**பட்டியல் III**

**தெரிவு செய்யப்பப்பட்ட கதிர்வீச்சு நியூக்ளைட்டுகளுக்கான ஆபத்தான மூலமொன்றுக்கு (D பெறுமதி) நேரொத்த செயற்பாடு மற்றும் அவற்றின் பெருக்கங்கள்**

| கதிர்வீச்சு நியூக்ளைட் | ***1000 x D*** | | ***10 x D*** | | ***D*** | |
|---|---|---|---|---|---|---|
| | ***(TBq)*** | ***(Ci)*** [a] | ***(TBq)*** | ***(Ci)*** [a] | ***(TBq)*** | ***(Ci)*** [a] |
| Am -241 | 6.E+01 | 2.E+03 | 6.E - 01 | 2.E+01 | 6.E -02 | 2.E + 00 |
| Am - 241/Be | 6.E+01 | 2.E+03 | 6.E - 01 | 2.E+01 | 6.E -02 | 2.E + 00 |
| Cf-252 | 2.E+01 | 5.E+02 | 2.E - 01 | 5.E -00 | 2.E -02 | 5.E - 01 |
| Cm -244 | 5.E+01 | 1.E+03 | 5.E - 01 | 1.E+01 | 5.E -02 | 1.E + 00 |
| Co - 60 | 3.E+01 | 8.E+02 | 3.E - 01 | 8.E+00 | 3.E -02 | 8.E - 01 |
| Cs -137 | 1.E+02 | 3.E+03 | 1.E+00 | 3.E+01 | 1.E -01 | 3.E + 00 |

| கதிர்வீச்சு நியூக்ளைட் | *1000 x D* | | *10 x D* | | *D* | |
|---|---|---|---|---|---|---|
| | *(TBq)* | *(Ci)* [a] | *(TBq)* | *(Ci)* [a] | *(TBq)* | *(Ci)* [a] |
| Gd -153 | 1.E+03 | 3.E+04 | 1.E + 01 | 3.E + 02 | 1.E + 00 | 3.E + 01 |
| Ir - 192 | 8.E+01 | 2.E+03 | 8.E - 01 | 2.E + 01 | 8.E - 02 | 2.E + 00 |
| Pm -147 | 4.E+04 | 1.E+06 | 4.E + 02 | 1.E + 04 | 4.E + 01 | 1.E + 03 |
| Pu -238 | 6.E+01 | 2.E+03 | 6.E - 01 | 2.E + 01 | 6.E - 02 | 2.E + 00 |
| Pu -239[b]/Be | 6.E+01 | 2.E+03 | 6.E - 01 | 2.E + 01 | 6.E - 02 | 2.E + 00 |
| Ra - 226 | 4.E+01 | 1.E+03 | 4.E - 01 | 1.E + 01 | 4.E - 02 | 1.E + 00 |
| Se -75 | 2.E+02 | 5.E+03 | 2.E + 00 | 5.E + 01 | 2.E - 01 | 5.E + 00 |
| Sr - 90 (Y -90) | 1.E+03 | 3.E+04 | 1.E + 01 | 3.E + 02 | 1.E + 00 | 3.E + 01 |
| Tm -170 | 2.E+04 | 5.E+05 | 2.E + 02 | 5.E + 03 | 2.E + 01 | 5.E + 02 |
| Yb - 169 | 3.E+02 | 8.E+03 | 3.E + 00 | 8.E + 01 | 3.E - 01 | 8.E + 00 |
| Au -198* | 2.E+02 | 5.E+03 | 2.E + 00 | 5.E + 01 | 2.E - 01 | 5.E + 00 |
| Cd - 109* | 2.E+04 | 5.E+05 | 2.E + 02 | 5.E + 03 | 2.E + 01 | 5.E + 02 |
| Co - 57* | 7.E+02 | 2.E+04 | 7.E + 00 | 2.E + 02 | 7.E - 01 | 2.E + 01 |
| Fe - 55* | 8.E+05 | 2.E+07 | 8.E + 03 | 2.E + 05 | 8.E + 02 | 2.E + 04 |
| Ge - 68* | 7.E+01 | 2.E+03 | 7.E - 01 | 2.E + 01 | 7.E - 02 | 2.E + 00 |
| Ni - 63* | 6.E+04 | 2.E+06 | 6.E + 02 | 2.E + 04 | 6.E + 01 | 2.E + 03 |
| Pd - 103* | 9.E+04 | 2.E+06 | 9.E + 02 | 2.E + 04 | 9.E + 01 | 2.E + 03 |
| Po - 210* | 6.E+01 | 2.E+03 | 6.E - 01 | 2.E + 01 | 6.E - 02 | 2.E + 00 |
| Ru - 106 (Rh - 106)* | 3.E+02 | 8.E+03 | 3.E + 00 | 8.E + 01 | 3.E - 01 | 8.E + 00 |
| Tl -204* | 2.E+04 | 5.E+05 | 2.E + 02 | 5.E + 03 | 2.E + 01 | 5.E + 02 |

a. பயன்படுத்தப்படவேண்டிய முதன்மைப் பெறுமதிகள் TBq இல் தரப்படுகின்றன. கியூறி பெறுமதிகள் செயல்முறை பயனுறுன்மைக்கு வழங்கப்பட்டு மாற்றப்பட்ட பின்னர் நேர்த்தியாக்கப்படுகின்றன.

b. இக்கட்டான நிலை மற்றும் பாதுகாப்பு வழிமுறைப் பிரச்சினைகள் D இன் பெருக்கங்களுக்கு கவனத்திற்கொள்ளப்படத் தேவையாகவிருக்கும்.

*இக்கதிர்வீச்சு நியூக்ளைட்டுகள் 1, 2 அல்லது 3 என்னும் வகுதிகளினுள் அவற்றை இடுகின்ற செய்றபாட்டு மட்டங்களுடனான தனிப்பட்ட கதிரியக்க மூலங்களில் பயன்படுத்தப்படுவதற்கு சாத்தியமிராது.

குறிப்பு: இவ்விணைப்பில் தரப்படாத கதிர்வீச்சு நியூக்ளைட்டுகளின் D பெறுமதிகள் அத்தகைய தரவு தேவைப்படுகின்றவாறும் தேவைப்படுகின்றபோதும் பேரவையினால் தீர்மானிக்கபபடுகின்றன.

மூலங்களின் கூட்டுமொத்தம்

உற்பத்திச் செயன்முறைகளில் (உ- ம். அதே அறை அல்லது கட்டிடத்தில்) அல்லது களஞ்சியப்படுத்துவை செயலிடங்களில் (உ- ம். அதே அடைப்பில்) பேன்றவாறு, பல்வேறு கதிரியக்கமூலங்கள் மிகக்கிட்டிய தூரத்தில் உள்ளவாறான நிலைமகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய சூழ்நிலைகளில், ஒரு கதிர்வீச்சு நியூக்ளைட் மட்டும் காணப்பட்டால், கதிரியக்க மூலங்களின் சுருக்கமான செயற்பாடு கதிர்வீச்சு நியூக்கைட்டின் தோதான D பெறுமதியினால் பிரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் கணக்கிடப்பட்ட விகிதம் A/D நேரொத்த பாதுகாப்பு மட்டத்தைத் தீர்மானிப்பதற்கு பட்டியல் II இல் தரப்பட்ட விகிதங்கள் A/D உடன் ஒப்பிடப்படுதலும் வேண்டும், பல்வேறு கதிர்வீச்சு நியூக்ளைட்களுடனான கதிரியக்க மூலங்கள் காணப்பட்டு கூட்டுமொத்தமாக்கப்படுவதற்காகவிருந்தால், அப்போது விகிதங்கள் A/D இன் தொகை, சூத்திரத்துக்கு இணக்க வகுதியைத் தீர்மானிப்பதில் பயன்படுத்தப்படுதல் வேண்டும்;

கூட்டுமொத்தம் A/D -

$$\sum_n \frac{\sum_i A_{i,n}}{D_n}$$

இங்கு:

$A_{i,n}$ = n என்ற கதிர்வீச்சு நியூக்ளைட்டின் i என்ற ஒவ்வொரு தனியான மூலத்தின் செயற்பாடு.
$D_n$ = n என்ற கதிர்வீச்சு நியூக்ளைட்டுக்கான D பெறுமதி.

**அட்டவணை II**

**(ஒழுங்குவிதி 28)**

**பாதுகாப்பு திட்டமொன்றிற்கான உள்ளடக்கம் பற்றிய உதாரணங்கள்**

பாதுகாப்பு திட்டமொன்று மூலத்தின் (மூலங்களின்) பாதுகாப்புக்காக பயன்படுத்தப்படுகின்ற பாதுகாப்பு அணுகுமுறை மற்றும் முறைமையை விவரிப்பதற்கு அவசியமான எல்லாத் தகவல்களையும் உள்ளடக்குதல் வேண்டும். விபரத்தின் மட்டம் மற்றும் உள்ளடக்கத்தின் ஆழம், திட்டத்தினால் மேவப்படும் மூலத்தின் (மூலங்களின்) பாதுகாப்பு மட்டத்துடன் ஏற்றவாறாக இருத்தல் வேண்டும். பின்வரும் தலைப்புக்கள் பொதுவாக உள்ளடக்கப்படுதல் வேண்டும்:

(அ) மூலம் பற்றிய விவரணம், அதனை வகுதிப்படுத்தல் மற்றும் அதன் பயன்பாடு.

(ஆ) மூலம் பயன்படுத்தப்படுகின்ற அல்லது களஞ்சியப்படுத்தப்படுகின்ற சூழல், கட்டிடம் மற்றும்/ அல்லது செயலிடம் பற்றிய விவரணம் மற்றும் தோதானவிடத்து, செயலிட தளக்கோளம் மற்றும் பாதுகாப்பு முறைமையின் வரைபடமொன்று.

(இ) பொதுமக்களுக்கு அணுகத்தக்கதான இடப்பரப்புகளுடன் தொடர்பான கட்டிடம் அல்லது செயலிடத்தின் அமைவிடம்.

(ஈ) உள்ளக பாதுகாப்பு நடவடிக்கை முறைகள்.

(உ) பின்வருவன உள்ளடங்ககலாக குறிப்பிட்ட கட்டிடம் அல்லது செயலிடத்திற்கான பாதுகாப்பு திட்டத்தின் குறிக்கோள்கள் :

(i) எதிர்நோக்கப்பட வேண்டிய குறிப்பிட்ட அக்கறை: அதிகாரமளிக்கப்படாத அகற்றுகை, அழித்தல் அல்லது தீய எண்ணத்துடனான பயன்பாடு;

(ii) தேவைப்படக்கூடியவாறான துணைநிலையான சாதனம் உட்பட விரும்பத்தகாத விளைவுகளைத் தடுப்பதற்கு தேவையான கட்டுப்பாட்டு வகை; அத்துடன்

(iii) பாதுகாக்கப்பட வேண்டிய சாதனம் அல்லது வளவுகள்.

(ஊ) பின்வருவன உட்பட பயன்படுத்தப்படவேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள்:

(i) பாதுகாப்பதற்கான, கண்காணிப்பு வழங்குவதற்கான, அணுகுகைக் கட்டுப்பாட்டை வழங்குவதற்கான, கண்டுபிடிப்பதற்கான, தாமதப்படுத்துவதற்கான, பதிலளிப்பதற்கான மற்றும் அறிவிப்பதற்கான வழிமுறைகள்; அத்துடன்

(ii) ஊகிக்கப்பட்ட அச்சுறுத்தலுக்கெதிரான வழிமுறைகளின் தரத்தை மதிப்பிடுவதற்கான வடிவமைப்பு சிறப்புக்கூறுகள்.

(எ) பின்வருவன உட்பட பயன்படுத்தப்படவேண்டிய நிருவாக வழிமுறைகள்:

(i) முகாமை, பணியாட்டொகுதியினர் மற்றும் ஏனையோரின் பாதுகாப்பு வகிபங்குகள் மற்றும் பொறுப்புக்கள்;

(ii) மூலத்துக்கான (மூலங்களுக்கான) கணக்கீடு செய்தல் உட்பட நாளாந்த முறையான மற்றும் நாளாந்த முறையல்லாத தொழிற்பாடுகள்;

(iii) சாதனத்தின் பேணுகை மற்றும் அதனைப் பரீட்சித்தல்;

(iv) ஆளணியினரின் நம்பிக்கையான தன்மை பற்றிய தீர்மானம்;

(v) தகவல் பாதுகாப்பின் பிரயோகம்;

(vi) அணுக்க அதிகாரவளிப்புக்கான முறைகள்;

(vii) நிகழ்ச்சி அறிகையிடல் உட்பட அவசாரகால திட்டத்தின் பாதுகாப்பு தொடர்பான அம்சங்கள்;

(viii) பயிற்சியளித்தல்;

(ix) சாவி கட்டுப்பாட்டு நடவடிக்கைமுறைகள்.

(ஏ) அதிகரிக்கப்பட்ட அச்சுறுத்தல் மட்டத்தை எதிர்நோக்குவதற்கான நடவடிக்கை முறைகள்.

(ஐ) திட்டத்தின் பயனுறுதன்மையை காலாகாலமான மதிப்பிடுவதற்கான மற்றும் அதற்கிணங்க அதனை நாளதுவரையாக்குவதற்கான செயல்முறை.

(ஒ) பயன்படுத்தப்படுவதற்கு தேவையான எவையேனும் நட்டஈடுசார் வழிமுறைகள்.

(ஓ) ஏலவேயுள்ள ஒழுங்குவிதிகள் அல்லது நியமங்கள் பற்றிய குறிப்பீடுகள்.

EOG 07 - 0008

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.